பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 09 2025 7.15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

   ”பார்கிங்” தமிழ் திரைப்படம் மூன்று விருதுகளை பெற்றுள்ளது.

2. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்மூலம், நாட்டின் சுகாதார கட்டமைப்பில் புரட்சி ஏற்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
3. படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் சேவை அடுத்த மாதம் தொடங்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
4. இந்திய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி, இலங்கை பிரதமர் Harini Amarasuriya-வுடன் இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.
5. குருகிராம் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Akanksha Dileep – Soha Sadiq இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<>>>>>

தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2023-ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருதை பிரபல நடிகர் மோகன் லாலுக்கு அவர் வழங்கினார்.

சிறந்த தமிழ் திரைப்படம் உட்பட மூன்று விருதுகளை ”பார்கிங்” திரைப்படம் பெற்றது.

சிறந்த இசையமைப்பாளருக்கான விருதை ”வாத்தி” திரைப்படத்திற்கு இசையமைத்த ஜி.வி. பிரகாஷ் குமார் பெற்றார்.

சிறந்த திரைப்படத்திற்கான விருது ஹிந்தி திரைப்படமான “Twelth Fail” திரைப்படத்திற்கு வழங்கப்பட்டது.

சிறந்த துணை நடிகருக்கான விருது "பார்கிங்" திரைப்படத்தில் நடித்த எம் எஸ் பாஸ்கருக்கு வழங்கப்பட்டது.

சிறந்த நடிகருக்கான விருது ஜவான் திரைப்படத்தில் நடித்த ஷாருக்கான் மற்றும் Twelth Fail" திரைப்படத்தில் நடித்த Vikranth Massey-க்கும் வழங்கப்பட்டது.

சிறந்த நடிகைக்கான விருது Mrs. Chatterji Vs Norway திரைப்படத்தில் நடித்த ராணி முகர்ஜிக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பெண்களை மையப்படுத்தி திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதற்கும், இத்துறையில் ஏராளமான மகளிர் விருது பெறுவதற்கும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் பேசுகையில், இந்தியாவை திரைப்பட தயாரிப்பு மையமாக மாற்றுவதே பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை என்று குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்மூலம் நாட்டில் சுகாதார கட்டமைப்பில் புரட்சி ஏற்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஏழாண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வரும் ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின்மூலம், மக்களுக்கு மருத்துவ செலவுகளுக்கான நிதி பாதுகாப்பும், கண்ணியமும் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் அதிகாரத்தை உறுதி செய்யும் வகையில், இந்த திட்டம் மக்களுக்கு உதவி வருவதாகவும் கூறினார்.

மக்களின் தேவையை புரிந்துகொண்டு கொண்டுவரப்பட்ட ஆயுஷ்மான் பாரத் திட்டம் உயர் தரத்திலான மருத்துவ சேவையை உறுதி செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டம் என்ற தலைப்பில் மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா எழுதிய கட்டுரையை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் சுகாதாரத்தையும் காக்க வேண்டும் என்ற அரசின் உறுதிபாட்டை செயல்படுத்தும் திட்டமாக ஆயுஷ்மான் பாரத் அமைந்துள்ளது என்பதை இந்த கட்டுரையில் அவர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் சேவை அடுத்த மாதம் தொடங்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தில்லி Shakur Basti ரயில் முனையத்தில் இத்தகைய வந்தே பாரத் ரயில் தயாராக இருப்பதாகவும், இரண்டாவது ரயில் தயாரிக்கப்பட்டபின் அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் இந்த சேவை தொடங்கப்படும் என்றார்.

இதனிடையே, பஞ்சாபின் பெரோஸ்பூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையத்திலிருந்து தில்லிக்கு புதிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்பட உள்ளதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார்.

தற்போது பஞ்சாப் மாநிலத்திலிருந்து ஐந்து வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், ராஜ்புரா – மொஹாலி இடையே 443 கோடி ரூபாய் செலவில் புதிய ரயில் பாதைக்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதன்மூலம் அப்பகுதியில் உள்ள தொழில் மற்றும் வேளாண் துறை வளர்ச்சி மேம்படும் என்று திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

தீபாவளி மற்றும் Chath பண்டிகையையொட்டி, பயணிகளின் வசதிக்காக நாடு முழுவதும் 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.

இந்த ரயில்கள் அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், நவம்பர் 15-ஆம் தேதிவரை இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உணவுப்பொருட்கள் பாதுகாப்பாகவும், சுகாதாரமாகவும் சேமிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உணவு தர கட்டுப்பாட்டு அலுவலர்கள் மக்களின் மாறிவரும் உணவு பழக்கத்திற்கு ஏற்ப விழிப்புடன் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலக உணவு தர கட்டுப்பாட்டு உச்சிமாநாடு வரும் வெள்ளிக்கிழமை தொடங்கி இரண்டு நாட்களுக்கு புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இதனிடையே, உலக உணவு இந்தியா மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் புதுதில்லியில் தொடங்கி வைக்கவிருப்பதாக மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

நாட்டின் சூரியசக்தி மின் உற்பத்தித் திறன் மூவாயிரத்து 343 ஜிகாவாட்டாக அதிகரிக்கும் என்று மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று சூரியசக்தி தொடர்பான ஆய்வறிக்கையை வெளியிட்டு பேசிய அவர், இத்துறையில் முதலீடுகள் மற்றும் பசுமை எரிசக்தி குறித்த எதிர்கால நடவடிக்கைகளுக்கு இந்த ஆய்வறிக்கை பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்றார்.

<<<<<<>>>>>

புதுமை கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதில் இந்தியா உலகளவில் 38 ஆவது இடத்தில் இருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு புதுமை கண்டுபிடிப்புகளுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

தேசிய ஆயுர்வேத தினத்தையொட்டி இன்று நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மனநல ஆரோக்கியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மத்திய ஆயுஷ் அமைச்சகத்துடன் இணைந்து, தேசிய மனநல கல்விக்கழகம் ஆயுஷ்மான் என்ற இயக்கத்தை பெங்களுருவில் இன்று தொடங்கியது.

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு நாடு முழுவதிலும் உள்ள மக்கள் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர். சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து ஆயுள் மற்றும் மருத்துவ காப்பீட்டுத்தாரர்களுக்கு முழு விலக்கு அளித்துள்ளதால் பயனாளிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது நாமக்கல் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

இந்திய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி இன்று இலங்கை பிரதமர் டாக்டர் Harini Amarasuriya-வுடன் கொழும்புவில் இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

இதில், இருநாட்டு பாதுகாப்பு மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, கொழும்பு தேசிய பாதுகாப்பு கல்லூரியில் உரையாற்றிய அட்மிரல் தினேஷ் திரிபாதி, இந்தியா - இலங்கை இடையே பல்வேறு துறைகளில் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பை எடுத்துரைத்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

குருகிராம் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Akanksha Dileep – Soha Sadiq இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-0, 6-2 என்ற செட் கணக்கில், Mahika Khanna – Sahira Singh இணையை வென்றது.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில், Mirudhula Palanivel – Janani Ramesh இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஒற்றையர் பிரிவில் Paavanii Paathak மற்றும் Prathyusha காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

Jing Shan சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankita Raina – Rutuja Bhosale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 6-3 என்ற செட் கணக்கில், சீனாவின் Chengyiyi Yuan – தென்கொரியாவின் Na Ri kim இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Riya Bhatia 6-4, 1-6, 6-3 என்ற செட் கணக்கில், சீனாவின் Xinyu Gao -வை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>